Registered as a Newspaper

வீடியோ படப்பிடிப்பு
கறுப்பு / வெள்ளை - கலர்
உட்புற வெளி புற
படப்பிடிப்பு பிறேம் செய்
தல், பிலிம்றோல் - தீப்பம்
விற்பனை.
ஸ்ருடியோ
நித்ய சித்ரா
சங்கானை

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை:
ரூ 1-25

சிறந்த வீடியோ
படப்பிடிப்புக்கு
ஸ்ருடியோ
நித்ய சித்ரா
பிரதான வீதி,
சங்கானை.

மடல்: 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு மாசி மீ 26 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 றஜப் பிறை 9 (10-03-1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 88

## செய்திச் சாரம்

### காயமடைந்த பெண் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கடந்த 4ஆம் திகதி யாழ் கோட்டை மீது நடத்தப்பட்ட ஷெல் தாக்குதல் காரணமாக காயமடைந்திருந்த பெண் ஒருவர் நேற்று மரணமானார்.

எம். லோறன்சியா (51 வயது) என்பவரே மரணமானவர் ஆவர்.

ஷெல் தாக்குதலின் போது இவரது மகளும் காயம் அடைந்தது குறிப்பிடத்தக்கது. இவர்களது வீடு சேதம் அடைந்தது. (இ-10)

### மற்றும் ஒரு முஸ்லிம் இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ் கோட்டையில் இருந்து சனிக்கிழமை ஏவப்பட்ட ஷெல்கள் காரணமாக காயமடைந்த முஸ்லிம் இளைஞர் ஒருவர் நேற்று மரணமானார்.

ஷெல் தாக்குதலினால் இறந்தோர் எண்ணிக்கை இத்துடன் 21 ஆக அதிகரித்துள்ளது.

ஜும்மா மோஸ்க் லேனில் விழுந்த ஷெல் காரணமாக இவர் காயமடைந்திருந்தார்.

இவர் தங்கியிருந்த

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பாடசாலை மெய்வல்லுநர் போட்டிகள் ரத்து

அச்சுவேலி, மார்ச் 10

இராணுவத்தினரின் ஆகாயத் தாக்குதலுக்குப் பயந்து அச்சுவேலிப் பகுதியில் பாடசாலைகள் பலவற்றில் நடைபெற இருந்த மெய்வல்லுநர் போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

வாதரவத்தை ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாசாலை, ஆவரங்கால் மகா ஜன வித்தியாசாலை, ஆவரங்கால் ஸ்ரீ நடராஜ இராமலிங்க வித்தியாசாலை ஆகியவற்றிலேயே இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

வாதரவத்தை ஆவரங்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சூட்டுக்கு இலக்காகிய பெண்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொட்டடிப் பகுதியில் நேற்றிரவு 9 மணியளவில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு அப்பாவிப் பெண் ஒருத்தி இலக்கானார்.

அம்பிகா (40 வயது) என்ற பெண்ணே கையில் படுகாயமுற்ற நிலையில் யாழ் ஆஸ்பத்திரியில் நேற்றிரவு சேர்க்கப்பட்டார். (உ)

### வீரமரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

நாவற்குழியில் நடைபெற்ற நேரடி மோதலின்போது பலியான இரண்டு போராளிகளுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

உத்தமன், கண்ணன் ஆகிய இரண்டு போராளிகளுமே வீரமரணமடைந்தவர்களாவர். (உ-10)

40 மணி நேரச் சமரின் பின்

# அன்றீஸ் கட்டடத்தில் இராணுவம் புகுந்தது

## எனினும் பல சிப்பாய்கள் புலிகளின் தாக்குதலுக்குப் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 10

**நாவற்குழியில் இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கும் இடையில் சுமார் 40 மணி நேரமாகக் கடும் மோதல் இடம் பெற்றது.**

**அதன் பின்னர் சிப்பாய்கள் அன்றீஸ் கட்டடத்திற்குள் நேற்று மாலையில் புகுந்துகொண்டனர்.**

**எனினும் நேற்றைய மோதலில் பல சிப்பாய்கள் புலிகளின் தாக்குதல்களினால் உயிரிழந்தனர். எண்ணிக்கை விவரம் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.**

**இதே வேளை ராணுவத்தினர் அன்றீஸ் தொழிற்சாலையில் பணிபுரிந்த ஊழியர்களைத் தடுத்து வைத்துப் பின்னர் விடுவித்தனர் என்றும் தெரியவந்தது.**

நாவற்குழி முகாமில் இருந்து சனிக்கிழமை நள்ளிரவு முதல் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. நேற்றுப் பிற்பகல் நான்கு மணி வரை - சுமார் 40 மணி நேரமாக - இராணுவத்தினருக்கும் சிப்பாய்களுக்கும் இடையில் கடும் சமர் நடந்தது.

இராணுவத்தினருக்கு ஈடுகொடுத்துப் போராளிகளும் கடும்தாக்குதல் நடத்தினர்.

அவர்களின் தாக்குதலில் பல சிப்பாய்கள் உயிரிழந்தனர். பலியான சிப்பாய்களின் சடலங்களை இராணுவத்தினர் வாகனம் ஒன்றில் முகாமுக்கு எடுத்துச் சென்றதாக அறியப்படுகிறது.

தென்னந் தோப்புகள் ஊடாக வெளியேற முயன்ற சிப்பாய்கள் பலரும் கொல்லப்பட்டனர் எனச் சொல்லப்பட்டது.

இதேவேளை, அன்றீஸ் தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் பலரை, சிப்பாய்கள் தடுத்து வைத்திருந்து விட்டு நேற்றுப் பிற்பகல் 4 மணி அளவில் விடு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாணவர் பலர் நேற்று பாடசாலை செல்லவில்லை

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் மாணவர் வருகை நேற்று மிகக் குறைவாகவே இருந்தது.

இதனால் சில பாடசாலைகள் அரை நேரத்துடன் மூடப்பட்டன.

பாலர் வகுப்பு பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்கள் பலர் பாடசாலை முடியும் வரை காத்துநின்று பிள்ளைகளை கூட்டிச் சென்றனர். (இ-10)

## யாழ் நகர் நேற்றும் வழமைக்குத் திரும்பவில்லை

### மக்கள் மத்தியில் பீதி நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ் நகரில் மக்கள் நடமாட்டம் நேற்றும் பெருமளவு குறைந்து காணப்பட்டது. சனிக்கிழமை நடந்த தாக்குதலை அடுத்து நேற்றும் வழமை நிலை திரும்பவில்லை.

பல கடைகள் மூடப்பட்டிருந்தன.

தனியார் பஸ் சேவைகளும் குறைந்தே காணப்பட்டன.

சனி, ஞாயிறு விடுமுறைகளின் பின் வங்கிகளில் திங்கட்கிழமைகளில் வழமையாகக் காணப்படும் வாடிக்கையாளர்கள் நெரிசலை நேற்றுக் காணமுடியவில்லை.

வழமையான வாடிக்கையாளரில் அரைவாசிப் பேரே நேற்று வந்தார்கள் என்று வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேற்று நண்பகலின் பின் யாழ் நகர பஸ் நிலையம் ஓரளவு வெறிச்சோடிக் காணப்பட்டது. (இ-5)

## பருத்தித்துறையில் ஷெல் தாக்குதல்கள்

### 65 வயதுப் பெண் காயம்

பருத்தித்துறை, மார்ச் 10

பருத்தித்துறையில் நேற்றுக்காலை 6 மணியிலிருந்து 7 மணி வரை பயங்கர ஷெல் தாக்குதல்கள் நடைபெற்றன.

முதலில் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நேற்றுக் காலை 6 மணியளவில் மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்தே பருத்தித்துறை இராணுவ முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்கள் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளை நோக்கி மேற்கொள்ளப்பட்டன.

தும்பளை, கலட்டி, வராத்துப்பளைப் பகுதிகளை நோக்கியே ஷெல்கள் ஏவப்பட்டன.

நேற்றைய தாக்குதலின்போது 65 வயது நிரம்பிய பாக்கியம் ஜயாத்துரை என்ற வயோதிபமாது படுகாயமுற்றார்.

இவருக்கு பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரியும், வடஇந்து மகளிர் கல்லூரியும் நடைபெறவில்லை.

ஏனைய பாடசாலைகளுக்கு மாணவர்கள் குறைவாகவே சென்றனர். (இ-118)



இந்த நேரத்துக்குச் ஷெல் அடிப்போமென்று ஒவ்வொரு நாளும் ரெலிபோன் பண்ணிச் சொல்லுகினமாம் அப்ப நகரத்திலை எப்பிடி மக்களைக் காணுகிறது!

### சுபநேரம்

10-03-1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:

10-54 முதல் 12-24 வரை

ராகுகாலம்:

3-24 முதல் 4-54 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## நிச்சயிக்கப்படாத ஊகங்களையிட்டு சஞ்சலமடையவேண்டாம்

யாழ்ப்பாணம், மார்ச் 10

நிச்சயிக்கப்படாத ஊகங்களையிட்டுச் சஞ்சலமடையவேண்டாம்.

இவ்வாறு யாழ்மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மாணவர்களையும் பெற்றோர்களையும் கேட்டுக்கொண்டார்.

கடந்த சில நாட்களாக மாணவர்கள், பெற்றோர்கள் மத்தியில் இராணுவம் சம்பந்தப்பட்ட சில ஊகங்களால் பீதி நிலவி வருகின்றது.

இதனால் நேற்றுச் சில பாடசாலைகளில் மாணவர்களின் வரவு பெருமளவு குறைந்து காணப்பட்டது.

இது தொடர்பாக கல்விப்பணிப்பாளரை எமது செய்தியாளர் வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பணிப்பாளர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:

இதுவரை எந்த ஒரு பாடசாலை அதிபரும் பாடசாலையை நடத்த

(4ம் பக்கம் பார்க்க)

### ஹெலி தாக்கு

சாவகச்சேரி, மார்ச் 10

நுணுவில் சந்திப் பகுதியை வட்டமிட்டுக் ஹெலி வேட்டுக்களைத் தீர்த்தது.

ஞாயிறுமாலை நிகழ்ந்த இந்தச் சம்பவத்தால் இப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

சந்தியில் இருந்து சுமார் 150 யார் தூரத்தில் இருந்த இரு வீடுகள் சிறிது சேதம் அடைந்தன.

### முழங்காவில் வந்தராணுவம்

முழங்காவில், மார்ச் 10

இலுப்பைக்கடவையில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் முழங்காவில்வரை வந்து திரும்பினர்.

ஒரு கவச வாகனம், ஜீப் சகிதம் முழங்காவிலுள்ள முருகன் கோவில் வரை இராணுவத்தினர் வந்தனர்.

இராணுவம் வந்தபோது பொதுமக்கள் பலர் காடுகளுக்குள் சென்று ஒளிந்துகொண்டனர்.

முழங்காவில், பல்லவராயன்கட்டு, ஜெயபுரம் ஆகிய பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

### அரச அதிபர் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கடந்த சனிக்கிழமை காலை நல்லூரில் நடத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சின்போது சேதமடைந்த வீடுகளையும், மாலையில் யாழ் நகரப் பகுதியிலும், ஆஸ்பத்திரி மீதும் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலினால் சேதமடைந்த இடங்களையும் யாழ். அரச அதிபர் பார்வையிட்டார். (இ-10)

## மக்கள் வங்கியின் அறிவிப்புக்கு அமைய நகைகளை மீளப்பெறுங்கள்

### அடகுவைத்தோர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

மக்கள் வங்கி நிர்வாகம் அறிவிக்கும் திகதிகளில் குறிப்பிடும் இடத்துக்குச் சென்று நகைகளை மீட்டெடுக்கும்படி அடகு வைத்தவர்கள் கோரப்பட்டுள்ளனர்.

அடகுவைத்தோர் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கை வருமாறு:

அடகுவைத்தோர் சங்கப் பிரதிநிதிகள் கடந்த திங்கள் அரசஅதிபர், மக்கள்வங்கி உதவிப் பொது முகாமையாளர் ஆகியோருடன் பேச்சுக்கள் நடத்தினர்.

அடகு நகைகள் மீள விப்பது குறித்தே இப் பேச்சுக்கள் அமைந்தன.

இந்த வாரத்துக்குள் சகல நகைகளும் யாழ்ப்பாணம் வந்து சேரும் என்றும் நகைகளை மீளளிப்பதற்கான திகதிகள் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

மக்கள்வங்கி உதவிப் பொது முகாமையாளர் திரு என். எஸ். பி. ஆனந்தன் மக்கள் வங்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்காட்டுச் சந்தி மீசாலைத் தாக்குதல்களில் சேதம் மிகச் சொற்பமே

சாவகச்சேரி, மார்ச் 10

சனிக்கிழமை மீசாலையிலும், புதுக்காட்டுச் சந்தியிலும் இரண்டு பொம்பர்கள் நடத்திய தாக்குதலின் போது இரண்டு தனிப்பட்டவர்களது கட்டடங்கள் மட்டும் சிறு சேதம் அடைந்தன. வயோதிபர் ஒருவருக்கும் சிறு காயம் ஏற்பட்டது.

மீசாலைப் பகுதியில் இடம் பெற்ற தாக்குதலில் ஒருவரது வீடு சிறுசேதம் அடைந்தது. வீட்டுக்கு அருகில் நின்ற வயோதிபரே [illegible] காயம் அடைந்தவர். [illegible] அவர் வீதியில் விழுந்த குண்டினால் நாய் ஒன்று சின்னாபின்னமாகிச் செத்து இறந்தது.

இதே நேரம் மற்றொரு பொம்மர் பளை, புதுக்காடு இயக்கச்சிப் பகுதியை வட்டமிட்டு புதுக்காட்டுப் பகுதியில் குண்டு மாரி பொழிந்ததில் ஓர் சிறு கடைக் கட்டடம் சேதமானது.

தென்னை மரங்கள் சில கருகி எரிந்தன. (இ-31-76)

## இந்தியாவின் தலையீடு உடனடியாகத் தேவை

### பிரசைகள் குழு அறிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

இந்தியா அர்த்தமுள்ள விதத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கா விட்டால், இலங்கையில் தமிழர்கள் இன்னும் சில மாதங்களில் அழிந்து போய்விடுவர். இந்தியத் தலையீடு அவசியம் தேவை.

இப்படி புன்னாலைக்கட்டுவன் பிரசைகள் குழு கொழும்பில் இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற்றுக்கு அனுப்பிய மகஜரில் கூறியுள்ளது.

மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது;

பிரதமர் ராஜீவ் காந்தியின் கடிதத்தைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ்ப்பகுதிகளில் அரசின் இராணுவ நடவடிக்கைகள் குறைந்து விட்டன என்று கூறப்படுவது தவறு.

அதற்கு மாறாக இராணுவ நடவடிக்கைகள் உண்மையில் அதிகரித்து உள்ளன.

தற்போது இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகள் திட்டமிட்ட இனக்கொலையாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரைக் காப்பாற்ற ராஜீவிடம் கோரிக்கை

### தமிழர் கூட்டணி விடுத்தது

சென்னை, மார்ச் 10

இலங்கை அரசின் இராணுவ நடவடிக்கைகளிலிருந்து தமிழரைக் காப்பாற்றும்படி இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியிடம் தமிழர் விடுதலைக் கூட்டணி கோரிக்கை விடுத்திருக்கிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியற்குழு இன்று சென்னையில் கூடி யாழ் நிலைமையைப் பரிசீலித்தது.

"தமிழரைக் காப்பாற்றும்படி பிரதமர் ராஜீவ் காந்தியைக் கோருவது தமிழரின் இனனல்கள் குறித்துத் தனது ஆழ்ந்த அனுதாப உணர்வைக் காட்டுவதற்காக பிரதமர் காந்திக்கு நன்றி கூறுவது".

— இப்படிக் குறிப்பிடும் தீர்மானம் ஒன்றை அரசியல் குழு நிறைவேற்றியது. (உ-எ)

## மனிதாபிமான ரீதியில் இந்தியா தலையிட வேண்டும்

### திராவிடகழகம் வேண்டுகோள்

சென்னை, மார்ச் 10

மனிதாபிமான அடிப்படையில் இந்தியா தலையிட்டு இலங்கைத் தமிழரைப் படுகொலையில் இருந்து காப்பாற்ற வேண்டும்.

திராவிடர் கழகத்தலைவர் திரு கி. வீரமணி, ஜனாதிபதி ஜெயில்சிங்குக்கு அனுப்பிய தந்தியில் முன்கண்டவாறு கோரிக்கை விடுத்திருக்கிறார். (உ-எ)

## பரிதாப நிலையை இந்தியாவிடம் கூறுங்கள்

### வர்த்தகர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ்நகரில் படையினர் தொடர்ந்து நடத்தும் மோட்டார் ஷெல் தாக்குதலினாலும் விமானத் தாக்குதல்களினாலும் வர்த்தகர்கள், பொதுமக்கள், பெரும்பாதிப் படைந்துள்ளனர்.

எமது மக்களின் பரிதாப நிலையை இந்திய அரசுக்கு விளக்கி ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

யாழ் வர்த்தகர் சங்கம், கொழும்பில் உள்ள இந்தியத் தூதரிடம் இப்படி அவசர வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

அப்பாவி மக்கள் இராணுவ நடவடிக்கைகளினால் கொன்று குவிக்கப்படுவதாகவும்—

வர்த்தக ஸ்தாபனங்கள் அழிக்கப்படுவதாகவும் அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ - 10)

## உண்ணாவிரதமிருந்த அகதிகளும் கோரிக்கை

சென்னை, மார்ச் 10

யாழ்குடா நாட்டில் இலங்கை இராணுவம் நடத்தும் கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து நேற்று சென்னையில் நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழ் அகதிகள் ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள 11 முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகளே இந்த உண்ணாவிரதத்தில் பங்குபற்றினர்.

பின்னர் தமிழ்நாடு ஆளுநர் திரு. எஸ். எல். குரானாவிடம் அகதிகள் ஒரு மனுவைச் சமர்ப்பித்தனர்.

இந்தியா உடனடியாகத் தலையிட்டு இலங்கைத் தமிழரைப் படுகொலை செய்வதில் இருந்து காப்பாற்ற வேண்டும் — இப்படி மனுவில் கூறப்பட்டு இருந்தது. (உ - எ)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரங்கள்

**வகுப்புகள்**

ரேடியோ, ரெலிவிசன் புதிய பிரிவு வகுப்புக்கள் ஆரம்பம்: 9-3-87. திங்கள், புதன், வெள்ளி 9-30 -- 11-30 விபரங்கட்கு: எலக்ரோ டெக்னிக்கல் இன்ஸ்டிரியூசன், கல்வளை, சண்டிலிப்பாய்.

மக்கள் முகம்

### நெடுங்கேணி சமாதான சபை

நெடுங்கேணி, மார்ச் 10

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நெடுங்கேணி ஊஞ்சால் கட்டி கிராம சேவையாளர் திரு எஸ். சிதம்பரப்பிள்ளை தலைமையில் நெடுங்கேணி சமாதான சபைக் கூட்டம் நடைபெற்றது.

பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: வி. குமாரசாமி, உபதலைவர்: அ.க. செல்வரத்தினம், செயலாளர்: பொ.மங்களசெஜநாதன், இணைச்செயலாளர்: எஸ். சிதம்பரப்பிள்ளை, சு. நித்தியானந்தம், ம. பரமநாயகம், நா. தெய்வேந்திரம்பிள்ளை, நா. செல்லத்துரை, க. நடராசா, ச. விநாயகமூர்த்தி, தி.த. மரேஸ் பொன்கள் ஆகிய எழுவர் சபை உறுப்பினர்களாக தெரிவாகினர் (இ-108)

# ஆசிரியர் பற்றுக்குறையால் ஆரம்பக்கல்வி பாதிப்பு

## கல்விப் பணிப்பாளரை சந்தித்து தூதுக்குழு முறையீடு நிவர்த்தி செய்யக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

ஆசிரியர்கள் பற்றுக்குறையால் யாழ் மாவட்ட மாணவர்களின் கல்வி பெருமளவு பாதிக்கப்படுகின்றது. குறிப்பாக ஆரம்பக்கல்வி பெருமளவு பாதிக்கப்படுகின்றது. போதியளவு ஆசிரியநியமனங்கள் மூலம் இக்குறை நிவர்த்தி செய்யப்படவேண்டும்.

வடமாகாண இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. எம். எம் மன்சூரை மேற்கண்டவாறு கேட்டுள்ளது.

சங்கத் தலைவர் திரு. ரி. புவனசுந்தரராஜா, செயலாளர் திரு வே. சிவராஜா தலைமையில் ஏழு பேர் கொண்ட சங்கப் பிரதிநிதிகள் குழு கல்விப் பணிப்பாளரை அவரது பணியகத்தில் சந்தித்த போதே இவ்வாறு கேட்டுக் கொண்டது.

சங்கத்தினர் பணிப்பாளரை மேலும் கேட்டுக்கொண்ட விடயங்களாவன.

★ சகல பட்டதாரி ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரியான சம்பளம் கொடுப்பனவு அமுல் செய்யப்படவேண்டும்.

தற்போது விஞ்ஞான பட்டதாரிகள் அதிக வேதியம் பெறுகின்றனர். இதே வேதியம் மற்றைய துறைப்பட்டதாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

★ ஆசிரியர்களின் இடமாற்றங்களைத் தீர்மானிப்பதற்கென ஆசிரிய சங்கப் பிரதிநிதிகளை உள்ளடக்கிய ஒரு இடமாற்றச்சபை உருவாக்கப்படவேண்டும்.

தீவுப்பகுதி மற்றும் ஏனைய கஷ்டப் பிரதேசம் போன்ற இடங்களில் நீண்ட காலம் பணி புரியும் ஆசிரியர்களுக்கு இடமாற்ற முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

★ தரம், சேவை, திறமை என்பவற்றை அடிப்படையாக வைத்தே ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுகள் வழங்கப்படவேண்டும்.

ஆசிரியர்கள் பதில், தற்காலிக அதிபர்களாக நியமிக்கப்பட்டு நிரந்தர அதிபர்களாக பதவி உயர்வு பெறுவது நிறுத்தப்படவேண்டும்.

★ பொதுப் பரீட்சைகளின்போது மேற்பார்வையாளர்கள், நோக்குநர்கள் விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவு செய்யப்படவேண்டும்.

★ புதிய மாணவர் கள் பாடசாலையில் அனுமதிப்பதற்கான தற்போதைய விதிகள் மாற்றப்படவேண்டும்.

★ தொகுதிதோறும் கிராமப்புறப் பாடசாலைகள் தரமுயர்த்தப்படவேண்டும். நகர்ப் புறப் பாடசாலைகளுக்கு காட்டப்படும் பாரபட்சம் நிறுத்தப்படவேண்டும்.

★ மாணவர்களுக்குத் தேவையான முக்கிய பாடப்புத்தகங்கள் உரிய காலத்தில் கிடைக்க ஆவன செய்யவேண்டும்.

★ 1985 ஆம் ஆண்டிற்குரிய புதிய சம்பள உயர்வு இன்னும் கிடைக்கப் பெறாத ஆசிரியர்களுக்கு அச்சம்பள உயர்வு கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் (இ-5)

## பாணில் பீடித்துண்டும் மின்சாரத் தடையும்

யாழ்ப்பாணம், மார்ச் 10

பாணுக்குள் பீடித்துண்டு ஒன்று இருந்தது கண்டுபிடிக்கப்பட்டு பேக்கரி உரிமையாளருக்குத் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அந்த பேக்கரி உரிமையாளர் "மின்சாரத் தடை நேரத்தில் தயாரிக்கப்பட்ட பாண் அது" என்று பதிலளித்தாராம்.

அண்மையில் வலி - கிழக்குப் பகுதி ஒன்றில் நடைபெற்ற தேநீர் சாலைகள், உணவுக் கடைகள், பேக்கரி உரிமையாளர்கள் சந்திப்பு ஒன்றின்போது மேற்கண்ட தகவலும் தெரிய வந்தது.

அங்கே தெரிவிக்கப்பட்ட மற்றும் சில கருத்துக்களாவன

எரிபொருள் தடை காரணமாக நகரங்களில் குப்பைகள் அகற்றுவது தடைப்பட்டுள்ளது.

குப்பை கூழங்களை உண்பதன் மூலம் பன்றிகளே அவற்றைப் பெருமளவு அகற்றுகின்றன (இ-5)

## முறைசாராக் கல்வி நெறி இறுதிப்பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

யாழ் கல்விப்பகுதியால் நடத்தப்பட்ட முறைசாராக் கல்வி நெறி டடவரைஞர் (சிவில் 1986) பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன.

### சித்தியடைந்தோர் விவரம்

தோமஸ் எட்வேட், மானிப்பாய், சந்தையா ஹென்றி ஜோன்ஸன் யாழ்ப்பாணம், கனகசிங்கம் இளங்கிரன் சங்கானை, வேலாயுதபிள்ளை ஜீவானந் யாழ்ப்பாணம், குமாரசாமி கமலராஜன் கோப்பாய், கனகசூரியர் கணேசசூரியர் மானிப்பாய், சபாபதிப்பிள்ளை கிருபாகரன் சந்நிதமடம், பாலசிங்கம் மயூரன் யாழ்ப்பாணம், சுவாரட்ணம் இராஜநாதன் சங்கானை, தில்லையம்பலம் ரவிஷங்கர் யாழ்ப்பாணம், புவனசுந்தரம் ரூபின் ரூக்ஸ் மானிப்பாய், கனகரட்ணம் கிருகுமார் கதுமன், குகநாதராஜா சுபாஹரன் கன்னுகம், கந்தையா சசீந்திரன் உடுவில், கிருஷ்ணமூர்த்தி வத்சலன் சுழிபுரம், சுப்பிரமணியம் பரானந்தன் கொக்குவில், சந்திரிகா தர்மலிங்கம் உரும்பராய், சித்திரா நாகேஸ்வரன் கொய்யா தோட்டம், ஜெகதீஸ்வரி பேரம்பலம் சங்கானை, செல்வி பதுமசேனு சின்னத்துரை இணுவில், ரேகினி இராசையா மானிப்பாய், சகுந்தலா பாலசுப்பிரமணியம் சங்கானை.

### நூனசித்தியைப் பூர்த்தி செய்தோர்

சிவஞானவதி பாலசிங்கம் ஏழாலை, ரவீந்திரன் சண்முகம் சுழிபுரம்.

### சுருக்கெழுத்து, தட்டச்சு (ஆங்கிலம்)

கிளெய்றீ உஷா குமாரி ரூலாரியோ ஜெகநாதம் பிளை நல்லையா, மேரியா கபிரியல்லா இரட்ணதேவி பற்றிக், தாம்பிரவரணி சிவராஜசிங்கம்

### நூன சித்தி

சித்தராஞ்சனி துரைசிங்கம், ஞானசெளரி சிவஞானம், நகுலினி கைலாசபிள்ளை, ரவிதா ராஜா, விஜிதா பாலசுப்பிரமணியம் (இ)


யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம் வட்டுக்கோட்டை

**தொழிற் பயிற்சி வகுப்புகள்**

கட்டிட நிர்மாண வேலைகளில் அதிக வேதியம் பெறும் தொழில்களான மேஸ்திரி வேலை, மரவேலை தொழிற்பயிற்சி வகுப்புகள் 23-3-87 இல் ஆரம்பமாகின்றன.

காலம்: 5 மாதங்கள் (100 வேலைநாட்கள்)

மொழி: தமிழ் மூலமும் ஆங்கில விளக்கமும்

பாடவிதானம்:

மனை நிர்மாணத் தொழில் சம்பந்தமான சகல விளக்கங்களும் அளிக்கப்படும். நேரடிப்பயிற்சியும் அளிக்கப்படும்.

வயது: 22 வயதிற்கு உட்பட்டவர்கள்.

தகைமை: G.C.E (O/L)வரை படித்தவர்கள்

ஒழுங்காகப் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 10/- இரசவடியும் வழங்கப்படும் -- பயிற்சி இலவசம்.

விண்ணப்பப் பத்திரம் காரியாலயத்தில் பெற்று உடனே விண்ணப்பிக்கவும். 25-3-87 புதன் காலை 9-00 மணிக்கு காரியாலயத்தில் சமுகம் அளிக்கவும்.

-- பணிப்பாளர்


### உடற்பயிற்சி போட்டி

பருத்தித்துறை, மார்ச் 10

கோப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையேயான உடற்பயிற்சிப் போட்டிகள் எதிர்வரும் 12 ஆம் திகதி அச்சுவேலி சென் திரேசா மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக உடற்கல்வி வட்டாரக் கல்வி அதிகாரி திரு எஸ். கணேசலிங்கம் பங்குபற்றுவார். (இ-118)

## உடையார்கட்டில் பிரசைகள் குழு

முள்ளியவளை, மார்ச் 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் உடையார்கட்டுக் கிராமத்தில் பிரசைகள் குழு ஒன்று அங்குரார்ப்பணஞ் செய்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு பிரசைகள் குழுக்களின் ஒன்றியத் தலைவர் திரு. நா. மகாலிங்கசிவம் தலைமை வகித்தார்.

தமிழ் பேசும் பகுதிப் பிரசைகள் குழுக்களின் இணைப்புச் செயலாளர் திரு. எஸ். சிவானந்தராசா பேசுகையில், 'இன்றைய நெருக்கடியான கால கட்டத்தில் பிரசைகள் குழுக்கள் சக்தி வாய்ந்தவையாக இருப்பதால்தான் மக்களின் குறைபாடுகளை புறக்கணிக்க முடியாத நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது'— என்று சொன்னார்.

முல்லைத்தீவுக்கு வந்துள்ள அகதிகளுக்கு வன்னிப் பிரதேச மக்கள் ஆற்ற வேண்டிய சேவைகள் பல உள்ளன, கதவும் நோர்வே ஸ்தாபனங்களுக்கு பிரசைகள் குழுக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்— இப்படி திரு. சிவானந்தராசா மேலும் சொன்னார்.

ஒன்பது மைல் இடைவெளி உள்ள உடையார்கட்டு, விஸ்வமடு ஆகிய இடங்களுக்கு தனித்தனியே கிராமசேவையாளர் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும் என்று கோரும் தீர்மானம் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

முல்லைத்தீவுப் பிரசைகள் குழுவின் தாய்ச் சங்கச் செயலாளர் திரு கே. கதிரவேலுவும் மற்றும் பலரும் பேசினர் (இ-எ-93)

### புதிய கட்டட திறப்பு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 10

வேலணை சைவப்பிரகாச வித்தியாலய புதிய கட்டடத் திறப்பு விழா நாளை 11 ஆம் திகதி புதன் காலை நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் திரு. செ. வரதலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம் மன்சூர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸ், திரு. எம். பிரான்சிஸ், திரு. பொன் கணேசன், திரு. க. இ. ஆறுமுகம் திரு. எம். சிவராசரத்தினம் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (இ-5)

விளையாட்டரங்கு

## யாழ். இந்துவுக்கு இன்னிங்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம், மார்ச் 10

சரவணமுத்து மைதானம், கொழும்பு... இலங்கை சிமெந்து லிமிட்டெட் அணிக்கெதிரான சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி ஒரு இன்னிங்ஸ் 76 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் லங்கா சிமெந்து லிமிட்டெட் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 76 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சந்திரன், தேவானந்தன், சிறிதரன் ஆகியோர் முறையே 17,14, 10 ஓட்டங்களைப் பெற்றனர்.

எஸ். கே. புவனேந்திரன், கே. பிரேம்நாத் ஆகியோர் முறையே 9, 17 ஓட்டங்களுக்கு தலா 3 விக்கெட்டுக்களையும் கே. எஸ். ரவிக்குமார் 14 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும் பிரபானந்தன் 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய யாழ் இந்து அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 207 ஓட்டங்களைப் பெற்ற போது ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

எஸ் பதமபிரகாஷ் 50 ஓட்டங்களையும் கே.எஸ். ரவிக்குமார், கே. பிரேம்நாத், எஸ். கே. புவனேந்திரன் ஆகியோர் முறையே 46,38,21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பலசிங் 60 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், சந்திரசிறி 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் தர்மராஜா, சந்திரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 131 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் துடுப்பெடுத்தாடிய லங்கா சிமெந்து லிமிட்டெட் அணி 55 ஓட்டங்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

தேவானந்தன் 18 ஓட்டங்களையும் எஸ். நரேந்திரன் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ் பி. பிரபானந்தன் 16 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களையும் கே. எஸ் ரவிக்குமார் 16 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (இ-7)

## யாழ். பல்கலைக்கழக அணி வென்றது

யாழ்ப்பாணம், மார்ச் 10

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பல்தொழில் நுட்ப நிறுவன அணிக்கெதிரான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாண பல்கலைக்கழக அணி 188 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் பல்கலைக்கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 48 1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 855 ஓட்டங்களைப் பெற்றது.

ஆர். மகிந்தா சிறப்பாக ஆடி 78 ஓட்டங்களையும் எம். பரமலிங்கம் கே. சிறிரங்கன் எஸ். சசிதரன் ஆகியோர் முறையே 5,35,24 3ஓட்டங்களையும் பெற்றனர்

என். திவாகரன் 53 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், எஸ். நிமலகுமார், எஸ். ஜெபக்குமார், ஆர். சபேஸ்வரன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி பல்தொழில் நுட்ப நிறுவன அணி 19 1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ் நிமலகுமார் எஸ். தற்பரன், கே. ஜெபநாதன் ஆகியோர் முறையே 17,15,14 ஓட்டங்களைப் பெற்றனர்.

எம். பரமலிங்கம் 8 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும், எஸ்.பி. மனோகரன் 8 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். (இ-7)

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## பாதுகாப்புச் செலவு மேலும் 50 வீதம் உயர்வு

கொழும்பு, மார்ச் 10

இலங்கை அரசின் இந்த ஆண்டுக்கான பாதுகாப்புச் செலவு மேலும் 20 கோடி டாலரினால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது எதிர்பார்த்ததைவிட 50 சதவீதம் அதிகமாகும்

இந்த ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டம் கடந்த டிசம்பரில் வெளியிடப்பட்ட போது, பாதுகாப்புச் செலவுக்காக 48 கோடியே 80 லட்சம் டாலர் ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது

ஆனால் இப்போது பாதுகாப்புச் செலவினம் 50 சத வீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப்பணம், நாட்டின் வருமானத்தில் 82 சதவீதமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழர் அமைப்புக்களுடன் விரைவில் சமரசம் பேசி சமாதானம் காணப்படாவிட்டால், நிதிநிலைமை கட்டுக்கடங்காமல் போய்விடும்; இதனால் நாடே திவாலாகி விடும் — இப்படி நிதி அமைச்சர் ரொனி டிமெல் அரசுக்கு அறிவித்திருக்கிறார். (உ-எ)

### அறவழி மலர் வெளியீடு

சாவகச்சேரி, மார்ச் 10

அறவழிப்போராட்ட 8 குழுவின் ஏழாவது ஆண்டு நிறைவினையொட்டி 'அறவழி' ஏழாவது ஆண்டு சிறப்பு மலர் வெளியீட்டு வைபவம் குழுவின் தலைவர் திரு. வி. எஸ். துரைராசா தலைமையில் நடைபெற்றது.

அறவழிப் பணிமனையில் நடைபெற்ற இவ்விழாவில் கைதடி நவ்வேட் பாடசாலை துணை அதிபர் திரு. கே. கோபாலகிருஷ்ணன், டாக்டர் திரு. த. சிங்கராசா, துணை அதிபர் திரு எஸ். நடேசபிள்ளை, திரு ஏ. தண்டாயுதபாணி, இளைப்பாறிய அதிபர் திரு. செ. சிவலிங்கம் ஆகியோர் ஆசி உரைகள் வழங்கியதைத் தொடர்ந்து குழுவின் செயலாளர்நாயகம் திரு. க. ஜீவகதாஸ் மலரை பெற்றுக்கொண்டார்

திரு. சிவலிங்கம் முதலாவது பிரதியை பெற்று வைத்தார். (உ-61)

## தொண்டர்களுக்கான ஆரம்ப சுகாதார பயிற்சி வகுப்புக்கள்

அலைதீவு, மார்ச் 10

தொண்டர்களுக்கான ஆரம்ப சுகாதார பயிற்சி வகுப்புகள் நெடுந்தீவு சுன்னிகர் பாடசாலையில் நடைபெற்றன.

தொடர்ந்து 14 ஆம் திகதிவரை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற வர்காலற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிதன் பணிப்பின் பேரில் நெடுந்தீவு சுகாதார பரிசோதகர் எம். கணேசன் ஒழுங்குகள் செய்துள்ளார்.

இப்பயிற்சி வகுப்புகளுக்கான விரிவுரைகளை டாக்டர் என் கனகசபை, டாக்டர் சா. விஜயராசா, டாக்டர் ஜி. பொன்னம்பலம், டாக்டர் என். கதிரவேற்பிள்ளை, டாக்டர் என். சிவராசா, டாக்டர் ஜி. கந்தசாமி, திரு. என். வைத்தீஸ்வரன், திரு பி. சந்திரசேகரம் ஆகியோரும் மற்றும் பலரும் வழங்குகின்றார்கள். (இ-ரி)

### மின்சார கட்டண நிலுவைக்கு கடும் நடவடிக்கை

அச்சுவேலி, மார்ச் 10

யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை அச்சுவேலி உப அலுவலகம் மின்சாரக் கட்டணப் பாக்கியை அறவிடுவதற்கு கடும் நடவடிக்கை எடுத்துள்ளது

சிவப்பு நோட்டீஸ் கிடைத்து இரண்டு தினங்களுக்குள் கட்டணப்பாக்கியை செலுத்தத் தவறினால் மின்சாரக் கட்டணத்திற்கு மேலாக பத்து ... அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது (1-இ)1

### வெள்ளி விழா

யாழ்ப்பாணம், மார்ச் 10

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கத்தின் 25 ஆவது ஆண்டு வெள்ளி விழா அண்மையில் நடைபெற்றது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் வெள்ளி விழா மலரை வெளியிட்டு வைத்துப் பேசினார். (இ-எ)

### ராமகிருஷ்ண மிஷன் விழா

பருத்தித்துறை, மார்ச் 10

ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவும், ஸ்ரீ ராமகிருஷ்ணரின் 150 ஆவது ஜயந்தி தின விழாவும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் 14 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அருளுரையும், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி சு. வித்தியானந்தனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம் பெறும்.

உதயன் - சஞ்சீவி பிரதம ஆசிரியர் திரு ம. வ. கானமயில்நாதன் செய்தி மடல் வெளியீட்டு உரை நிகழ்த்துவார். (இ-118)

## ஒலுமடு கிராமத்தில் கோஷ்டி மோதல்

நெடுங்கேணி, மார்ச் 10

இராணுவக் கெடுபிடி காரணமாக ஒதியமலை, பட்டிக்குடியிருப்பு ஆகிய கிராமங்களில் இருந்து குடிபெயர்ந்து ஒலுமடு கிராமத்தில் தங்கி உள்ள மக்களுக்கும் வேறு மாவட்டங்களில் இருந்து குடிபெயர்ந்து வந்து தங்கி உள்ள தோட்டத்தொழிலாளருக்குமிடையே நடந்த கோஷ்டி மோதலில் சிலர் காயமடைந்தனர்.

கோஷ்டி மோதலால் பாதிக்கப்பட்ட முப்பது குடும்பங்கள் நெடுங்கேணியில் தஞ்சமடைந்தன.

இளைஞர் கோஷ்டி ஒன்று அவர்களுக்கு உணவு வழங்கியது.

இந்த மோதல் தொடர்பாக இளைஞர் கோஷ்டி விசாரணை நடத்தி வருகிறது. (இ-108)

### சைக்கிள் களவு

கிளிநொச்சி, மார்ச் 10

டிப்போ பஸ் நிலையம் முன்பாகவுள்ள தனியார் வர்த்தக நிறுவனம் ஒன்றின் முன் விடப்பட்டிருந்த சைக்கிள் ஒன்று காணாமல் போய்விட்டது. (இ-76)

## காசநோய்த் தடுப்புச் சங்கத்தின் கருத்தரங்குகள் சிகிச்சை நிலையங்கள்

கல்முனை, மார்ச் 10

காச நோய் தடுப்புக்காக பல கருத்தரங்குகளையும் சிகிச்சை நிலையங்களையும் இவ்வாரத்தில் நடத்துவதற்கு வலி-தெற்கு பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

எதிர் வரும் வெள்ளிக்கிழமை புன்னாலைக்கட்டுவன் தெற்கு மாதலோடை நூல்நிலையத்தில் திரு. என். அரசலிங்கம் தலைமையில் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மறுநாள் சனிக்கிழமை மைலணி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுகாதார பரிசோதகர் திரு கனகசுந்தரராஜா தலைமையில் காச நோய் தடுப்புக் கருத்தரங்கு நடைபெறுகிறது.

அதே தினம் தெற்கு புன்னாலைக்கட்டுவன் மாதலோடை நூல் நிலையத்தில் காசநோய்த்தடுப்பு சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை உடுவில் மல்வம் சுகாதார பணிமனையில் சுகாதார பரிசோதகர் திரு கந்தவேலாயுதம் தலைமையில் காசநோயைத் தடுப்பது எப்படி என்பது பற்றிய கருத்தரங்கும் நடைபெறுகிறது.

யாழ் காசநோய் தடுப்பு அதிகாரி திரு. ஏ. பொரானந்தநாயகம் கருத்தரங்கு நிகழ்ச்சிகளை தயார் செய்து வருகிறார். (இ-27)

## கோயிலில் வெள்ளி அங்கி திருட்டு

சாவகச்சேரி, மார்ச் 10

கல்வயல் ஆயிலடிப் பிள்ளையார் ஆலயத்தில் சுமார் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான வெள்ளியால் செய்யப்பட்ட அங்கி களவாடப்பட்டுள்ளது.

கூரை ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள் மூலஸ்தான கதவை கம்பியால் தெண்டித் திறந்தே உள்ளே சென்றனர். (இ-31)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

ஒருவன் பிறர்க்குக் கேடு சூழ்வதால் தனக்கே கேடு சூழ்ந்து கொள்கிறான்.

-- ஹேஸியாட்

உதயன்

இல, 15, 2ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 10-03-1987 த.பெ இல. 28

# போர்ப் பிரகடனமும் இந்திய நிலைப்பாடும்

இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாகத் தமிழருக்கு எதிரான போராட்டத்தைப் பிரகடனப்படுத்தியிருப்பது குறித்தும்—

அத்தகைய சூழ்நிலையில்—

தமிழ் மக்கள் பகுதி, பணி எப்படி அமைய வேண்டும் என்பது குறித்தும்—

போராளிகள் செயற்பாடு, மக்கள் உறவு, அரசின் மோருக்குக்குத் தாக்குப் பிடித்தல் என்பன குறித்தும்—

கடந்த இரண்டு நாட்கள் இப்பத்தியில் ஆராய்ந்திருந்தோம்.

இன்று, இலங்கை அரசின் போராட்டப் பிரகடனத்தின் பின்னர் இந்தியாவின் செயற்பாடு, நிலைப்பாடு ஆகியவற்றை ஆராய்வது பொருத்தம் என எண்ணுகிறோம்.

விரும்பியோ விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ, இலங்கையின் இனப்பிரச்சினையோடு இந்தியா பின்னிப் பிணைந்துவிட்டது ஆனால் மத்தியஸ்தர் என்ற பதவியைச் சரியான முறையில் வகிக்காததால்— தீர்க்க தரிசனத்துடன் கூடிய சரியான கொள்கையைக் கடைப்பிடிக்காததால்— அது பல சிக்கல்களையும், குழப்பங்களையும் எதிர்நோக்கி நிற்கிறது.

இலங்கை ஜனாதிபதி, அரசியல் தீர்வில்தான் நாட்டம் கொண்டிருக்கிறார் என்று இந்தியா நம்பி மோசம் போய்விட்டது ஆனால் அவர் பிரச்சினையை இழுத்தடித்து தனது இராணுவ பலத்தை அதிகரிக்க இடம் அளித்துவிட்டது.

தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் இராணுவ, பொருளாதார அட்டூழியங்களை நிறுத்த வேண்டும் என்ற இந்தியாவின் நியாயமான கோரிக்கைகளைத் தட்டிக் கழிக்கவும், அக்கோரிக்கைகள் தவறானவை, ஒருதலைப் பட்சமானவை என்று காரணம் கற்பிக்கவும் இலங்கை துணியும் அளவுக்கு இந்தியாவின் மத்தியஸ்தம் பலவீனமுற்று விட்டது.

அதன் விளைவுகள் தமிழர் நிலையை நலிவுறச் செய்து விட்டன. இந்தியாவின் நிலையைக் கேலிக்கிடமாக்கி அபகீர்த்தியை உண்டாக்கி விட்டன.

இனியும் பேச்சுவார்த்தை, கடிதப் போக்குவரத்து என்று காலத்தை வீணாக்கக் கூடாது. வெறும் கவலையும், அதிர்ச்சியும், நம்பிக்கையும் என்று மாறி மாறித் தெரிவித்து நடக்கப்போவது ஒன்றுமில்லை.

நடந்தவை நடந்தவைகளே. நிலத்தில் கொட்டிய பாலைக்குறித்துக் கவலைப்பட்டு ஆவது எதுவுமில்லை. இனியாவது சரியான கொள்கையை வகுத்து தமிழர்களுக்கு உதவுவதோடு, இந்தியா தனக்கு ஏற்பட்ட அவமானத்தையும் போக்க உடன் செயலில் இறங்க வேண்டும்.

இலங்கை அரசு தனது மூன்று நிபந்தனைகளை ஏற்கும்வரை மத்தியஸ்தத்திலிருந்து விலகி நிற்பதாக இந்தியா கடைப்பிடிக்கும் போக்குத் தவறானதாகும்.

மத்தியஸ்தனுக்கு அடங்காத குற்றவாளியிடமிருந்து பாதிக்கப்பட்டவனுக்கு எப்படி நியாயத்தைப் பெற்றுக்கொடுக்க முடியும்? ஆகவே, இந்தியா மத்தியஸ்தத்திலிருந்து முற்றாக விலகித் தமிழர்களுக்கு உதவ முன்வந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டும். இதுவரை தான் விட்ட தவறுக்கு இந்தியா செய்யக்கூடிய நிவாரணமும், நிவர்த்தியும் அதுவேயாகும். பாதிக்கப்பட்டவனுக்கு நியாயம் பெற்றுக் கொடுப்பதே உண்மையான மத்தியஸ்தமும், நீதியும் ஆகும்.

ராஜீவின் கடைசிக் கடிதத்தில் குறிப்பிட்ட 'டிமாஷ்' எனப்படும் ராஜதந்திர மாற்று நடவடிக்கை இலங்கைத் தமிழரின் உரிமைப் போராட்டத்தையும், போராளிகள் அணிகளையும் உத்தியோகபூர்வமாக அங்கீகரிப்பதாக அமையவேண்டும்.

இந்தியா அந்த முன் உதாரணத்தைக் காட்டினால், பல நாடுகள் அதே வழியைத் தொடரும். அதன்மூலம் உலகளாவிய ரீதியில் இலங்கை அரசுக்கு நெருக்குதல் கொடுத்து அதன் ஆட்டத்தை அடக்கி, அட்டூழியத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும். இலங்கை மீது பொருளாதாரத் தடைகள், நிதி உதவி நிறுத்தங்கள் என்பனவற்றுக்கு உலக நாடுகளின் ஆதரவைப் பெற இந்தியா செயலில் இறங்க வேண்டும்.

மொத்தமாக இந்தியா இனப்பிரச்சினை விடயத்தில் முற்றிலும் புதிய நிலைப்பாட்டையும், கொள்கைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். அவற்றை உடன் செயலாக்குவதே இப்போதைய அவசரத் தேவை. இந்தியா வேகமாகச் செயற்படாவிடில் ஈழத் தமிழர்களுக்கு ஏற்படக்கூடிய இழப்புக்களுக்கும், நலிவுகளுக்கும் அதுவே பொறுப்பேற்க வேண்டி வரும். இந்தியாவுக்கும் பெரும் தோல்வியாக முடியும்.

## தேசியச் சந்தை திறப்பு விழா

கொக்குவில், மார்ச்.10

விற்பனை அபிவிருத்தித் திணைக்கள திவைரால் தேசியச் சந்தை ஒன்று கண்டிக்குளியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை இயங்கவிருக்கும் இச் சந்தை] விற்பனை அபிவிருத்தி திணைக்கள யாழ் மாவட்ட பிரதி ஆணையாளர் திரு. சோ. கணேசநாதனால் நாளை புதன்கிழமை காலை 10.00 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. (இ-69)

# யூதப்பெண்கள் உண்ணாவிரதம்

மாஸ்கோ, மார்ச்.9

யூதர்களை இஸ்ரவேலுக்கு குடிபெயர்ந்து செல்ல அனுமதிக்க வேண்டும் என்று கோரி ரஷ்ய யூதர்கள், ரஷ்யாவின் ஒன்பது நகரங்களில் உண்ணாவிரத இயக்கம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர்

75 யூதப் பெண்கள் இந்த உண்ணாவிரத இயக்கத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

கடந்த ஞாயிறு காலை லெனின் கிராட் உட்பட ஒன்பது முக்கிய நகரங்களில் இந்த உண்ணாவிரத இயக்கம் ஆரம்பமானது

ரஷ்யாவில் வாழும் யூதர்கள் இஸ்ரவேலுக்கு இடம் பெயருவதை ரஷ்யா கடந்த பதினைந்து ஆண்டுகளாகக் கட்டுப்படுத்தி வருகிறது

சுமார் 4 லட்சம் யூதர்கள் இஸ்ரவேலுக்குத் தம்மை அனுப்பி வைக்கும்படி கோரி விண்ணப்பித்து உள்ளனர்

கடந்த மாதம் 146 யூதர்களை இஸ்ரவேலுக்கு செல்ல ரஷ்யா அனுமதித்தது.

உண்ணாவிரதம் இருக்கும் யூதப் பெண்களில் ஏழு பேரின் கணவன்மார் ரஷ்யத் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டு உள்ளனர். (இ-எ)

# பாகிஸ்தான் அணு ஆராய்ச்சியில் தொடர்ந்து ஈடுபடும்

இஸ்லாமாபாத், மார்ச் 9

பாகிஸ்தான் அணு ஆராய்ச்சித் துறையில் தொடர்ந்து ஈடுபடும்— பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் முன்கண்ட தகவலை பிரதி வெளிநாட்டு அமைச்சர் நாரணி வெளியிட்டார்.

அணு ஆராய்ச்சிப் பணி, சமாதான நோக்கத்தை] அடிப்படையாகக் கொண்டது என்றும் பிரதி அமைச்சர் அறிவித்தார். (இ-எ)

## ராஜினாமா செய்த செய்தி ஆசிரியர்

கேட்டவுண், மார்ச் 9

தென் ஆபிரிக்க அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் செய்தி ஆசிரியர் தனது பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

அரசுக்கும் கூட்டுத்தாபனத்துக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாகவே பதவியை இவர் ராஜினாமாச் செய்தார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ எ)

# 6 குழந்தைகள் உட்பட எண்மர் சுட்டுக் கொலை

துருக்கி, மார்ச் 9

குர்திஷ் பிரிவினைவாத கிளர்ச்சிக்காரர்கள் துருக்கிப் பிரதேசத்தினுள் புகுந்து 6 குழந்தைகள் உட்பட 8 பொதுமக்களை சுட்டுக் கொன்றனர்

அதன் பின்னர் இக் கிளர்ச்சிக்காரர்கள் சிரிய பிரதேசத்தினூடாகத் தப்பிச் சென்று விட்டனர்.

அண்மையில் துருக்கி விமானப்படையினர் குர்திஷ் கிளர்ச்சிக்காரர்களின் முகாம்கள் மீது நடத்திய தாக்குதலுக்குப் பதிலடியாகவே, 8 சிவிலியன்கள் கொல்லப்பட்ட சம்பவம் இடம்பெற்றது

14 சிவிலியன்களை முன்னர் ஒருமுறை கிளர்ச்சிக்காரர்கள் சுட்டுக் கொன்றதற்குப் பதிலடியாகவே துருக்கி விமானப்படையின் தாக்குதல் அமைந்தது (இ-எ)

## பர்னாலாவுக்கு ஆதரவாக சர்வகட்சிக் கூட்டம்

சண்டிகார், மார்ச் 9

பஞ்சாப் தீவிரவாத சக்திகளைக் கண்டிக்க சர்வ அரசியல் கட்சிகள் நடத்திய பொதுக்கூட்டம் ஒன்று ஞாயிறு நடந்தது.

முதலமைச்சர் பர்னாலா தலைமை வகித்தார்

சில தேசிய பிராந்திய அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர். (இ-எ)

## றேகன் உத்தரவு

வாஷிங்டன், மார்ச் 9

கரிபியன் தீவுகளில் ஒன்றான கிரனடா மீது அமெரிக்கா 1983 ஆம் ஆண்டில் தாக்குதல்களை நடத்திய போது அமெரிக்கப் போர் வீரர்களைப் போல செயல்பட்ட வெளிநாட்டவர்கள் அமெரிக்கப் பிரஜாவுரிமை கோரிச் சமர்ப்பித்திருந்த விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படவுள்ளது

ஜனாதிபதி றேகன் இதற்கான விசேட உத்தரவை பிறப்பித்துள்ளார். (ஒ)

**வெளி உலகில்**

## உகண்டா அகதிகள் திரும்ப மறுப்பு

கார்ட்ரூம், மார்ச் 9

சூடானின் தென் பகுதியில் உள்ள முகாம்களில் இருக்கும் ஆயிரக்கணக்கான உகண்டா அகதிகள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார்கள்.

உகண்டாவில் பட்டினியால் இறக்க நேரிடும் என்று இவர்கள் அஞ்சுவதாக ஐ. நா. அதிகாரி தெரிவித்தார்.

சூடானின் தென்பகுதியில் உள்ள ஒரு லட்சத்தி எண்பதினாயிரம் உகண்டா அகதிகள் கடந்த வாரம் தமது தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்தனர். ஆனால் தற்பொழுது அந்த முடிவை மாற்றியுள்ளனர் என மேலும் அந்த அதிகாரி தெரிவித்தார். (ஒ)

# ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் பதவி விலகுவாரா?

வாஷிங்டன் மார்ச்.9

ரவர் விசாரணைக் கமிஷன் அறிக்கையைத் தொடர்ந்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸும் பதவி விலகுவாரா?

அமெரிக்க வெள்ளை மாளிகை பிரதம அதிகாரி டொனால்ட் றீகன், ஆணைக்குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து உடனே பதவி விலகினார்

அதைத் தொடர்ந்துதான் திரு. ஷுல்ட்ஸும் பதவி விலகுவாரா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஈரான் ஆயுத விற்பனை விவகாரம் தொடர்பான தகவல்கள் வெளியுறவு அமைச்சர் ஷுல்ட்ஸ், பாதுகாப்பு அமைச்சர் வின்ஸ்பேர்கர் ஆகியவர்களுக்குத் தெரிந்து இருந்தன.

இருந்தும் அவர்கள் அதிபர் றேகனுக்குத் தெரிவிக்கத் தவறி விட்டனர்—

இப்படி ரவர் ஆணைக்குழு தெரிவித்திருந்தது. (இ-எ)

## இந்தோனேஷியா அனுமதித்தது

ஜகார்த்தா, மார்ச் 8

இந்தோனேஷியாவில் தற்சமயம் தடை செய்யப்பட்டுள்ள கம்யூனிஸ்ட்கள் பலர் இவ்வாண்டு நடைபெறவிருக்கும் தேர்தல்களில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி இந்தோனேஷியாவில் தேர்தல்கள் நடைபெறும். (ஒ)

# வருமானவரிச் சவாலை எதிர்நோக்கத் தயார் என்கிறார் ராமராவ்

விஜயவாடா, மார்ச் 9

வருமானவரிவரி கட்டாத மோசடி சம்பந்தமான குற்றச் சாட்டுகளை எதிர்நோக்க நான் தயாராக இருக்கின்றேன்.

இப்படி ஆந்திர முதலமைச்சர் திரு என். ரீ. ராமராவ் அறிவித்து இருக்கிறார்

''குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் என்னை கை விலங்கிட்டு சிறையில் தள்ளட்டும்''- இப்படி ஆத்திரத்துடன் கூறினார் முதலமைச்சர் ராமராவ்

முதலமைச்சர் ராமராவின் சொத்துக்கள் பற்றி மத்திய அரசு விசாரணை நடத்தி வழக்குத் தாக்கல் செய்யும் என்று மத்திய அமைச்சர் வெங்கல்ராவ் விடுத்த பயமுறுத்தலுக்குப் பதிலளிக்கு முகமாகவே, முதலமைச்சர் ராமராவ் முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திரா காங்கிரஸ் தலைவர்கள் அரசியலை வியாபாரமாக்கி வருகின்றனர் என்றும் முதலமைச்சர் சொன்னார். (இ-எ)



**பொய்யாமொழி**

குறள்:

கல்லாதான் ஒட்பம் கழிய நன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்.

பொருள்:

கல்லாதவனுடைய அறிவுடைமை ஒருகால் மிக நன்றாக இருந்தாலும் அறிவுடையோர் அதனை அறிவின் பகுதியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்.

இனப்பிரச்சினை:

# ராஜீவ் நேரடியாகவே தீர்மானங்களை மேற்கொள்கிறார்

புதுடில்லி, மார்ச் 09

இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான தீர்மானங்களை பிரதமர் ராஜீவ்காந்தி நேரடியாகவே எடுக்கின்றார்.

இப்படி புதுடில்லி அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையில் வெளியுறவு அமைச்சர் என். டி. திவாரியை இனப்பிரச்சினைப் பேச்சுக்களில் நேரடியாக ஈடுபடுத்த பிரதமர் காந்தி முடிவு செய்துள்ளார் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் திரு பிரபாகரனுடன் தொடர்பு கொள்வதுதான் அமைச்சர் என். டி. திவாரியின் முதல் பணியாக இருக்கும் என்றும் இதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் திரு இராமச்சந்திரனின் உதவி நாடப்படும் என்றும் தெரியவருகிறது. (இ-எ)

## கல்வித் திட்டத்தில் 2 சீர்திருத்தங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 10

பாடசாலை நாட்களை அதிகரிப்பது, படிக்கும் போது ஜி. சி. ஈ. சாதாரண தர மாணவர்கள் காட்டும் திறமையைத் தனியாகக் கணிப்பது — ஆகிய இரண்டு சீர்திருத்தங்களை கல்வித் திட்டத்தில் சேர்ப்பது குறித்து கல்வி அமைச்சும் பரீட்சைத் திணைக்களமும் கூட்டாக பரிசீலனை செய்து வருகின்றன.

இச் சீர்திருத்தங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் பாடசாலை நாட்கள் அதிகரிக்கப்படும்; ஜி சி ஈ. சாதாரணப் பரீட்சையில் சித்தி எய்திய மாணவருக்கு வழங்கப்படும் சான்றிதழில் மாணவர் படிக்கும் போது காட்டிய திறமைகள் குறிப்பிடப்படும்.

இது பற்றி கல்வி அமைச்சர் ரணில் விக்ரமசிங்கா சொன்னதாவது;

இப்போது ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சை எடுக்கும் மாணவர்களில் 50 சதவிதமானோர் ஜி. சி ஈ. உயர்தரப் பரீட்சை எடுப்பது இல்லை. உயர்தரப் பரீட்சையை எடுப்பதற்கான தகுதியை அவர்கள் பெறத் தவறுவதே இதற்குக் காரணம்.

புதிய திட்டத்தின் கீழ் இவர்களுக்குத் தொழில் வாய்ப்பு வழங்கப் போகிறவர் பரீட்சை முடிவில் தங்கி இருக்கத் தேவை இல்லை

அதன் காரணமாகத்தான் ஜி. சி ஈ. சாதாரண தர பரீட்சைச் சான்றிதழில் பரீட்சை முடிவுடன் அம்மாணவன் பாடசாலையில் படித்து வந்த சமயத்தில் காட்டிய திறமை பற்றிய குறிப்பும் தனித்தனியாகப் பதியப்படும்.

இதன் மூலம் தொழில் வழங்குபவர் திறமையானவரைத் தெரிவு செய்ய முடியும்

அமெரிக்காவில் பாடசாலை நாட்கள் 190இல் இருந்து 220 ஆக அதிகரிக்கப்படவுள்ளது.

இலங்கையில் 180 தினங்களே பாடசாலைகள் இயங்குகின்றன. இது [illegible] போதாது நடத்தப் [illegible]

இப்படி அமைச்சர் தெரிவித்தார். (இ-எ)

**சமய சந்நிதிகளில்**

## ஆத்திப்புலம் விநாயகர் தேர்

யாழ்ப்பாணம், மார்ச் 10

கொழும்புத்துறை இழக்கு ஆத்திப்புலம் அருள்மிகு சந்திர சேகர விநாயகர் ஆலய வருடாந்த உற்சவங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

[illegible] முக்கிழமை தேர்த்திரு[illegible] திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஒ)

**செய்திக்கொத்து**

## வித்தியாலய பொதுக்கூட்டம்

வல்வெட்டித்துறை, மார்ச், 10

தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலய அபிவிருத்திச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 11 00 மணிக்கு வித்தியாலயத்தில் நடைபெறும்.

பல முக்கியமான விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட இருப்பதாக வித்தியாலய அதிபரும் அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திரு எஸ். யோகச்சந்திரன் தெரிவித்தார். (இ-160)

## சேவை நலம் பாராட்டு விழா

சாவகச்சேரி, மார்ச் 10

தமது 35 வருட ஆசிரிய சேவையில் இருந்து இளைப்பாறிய கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலய அதிபர் திரு. வே. எஸ் பொன்னையாவின் சேவை நலம் பாராட்டு விழா மேற்படி பாடசாலையில் நடைபெற்றது

அபிவிருத்திச் சபையாலும் ஆசிரியர்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழா வித்தியாலய அதிபர் திரு. வே. கைலேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (இ-31)

## தேங்காய் லொறி மீது தாக்குதல்

திருகோணமலை, மார்ச் 10

தேங்காய் லொறி ஒன்று இனந்தெரியாதவர்களினால் தாக்கப்பட்டதில் ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

லொறியில் சென்ற வேறு 5 நபர்கள் லொறியை அப்படியே விட்டுவிட்டு ஓடித்தப்பினர் திருமலையில் இச் சம்பவம் நடந்தது. (இ-150)

## பதவிஏற்பு

முள்ளியவளை, மார்ச் 10

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றிய திரு வி சுப்பிரமணியம் (முள்ளைமணி) முல்லைத்தீவு மகா வித்தியாலயத்துக்கு அதிபராகவும், முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் அதிபராக் கடமையாற்றிய திரு எஸ் இராஜேந்திரம் முல்லைத்தீவு வட்டாரக் கல்வி அதிகாரியாகவும் கடமை ஏற்றுள்ளனர். (இ-93)

## திருமலைத் தமிழர் சீர்திருத்த முகாமில்

திருகோணமலை, மார்ச் 10

பூசா தடுப்பு முகாமில் உள்ள திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழர்களில் 40 பேர் பலவந்த சீர்திருத்த முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி பலவந்த முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்ட இத்தமிழர் பெயர் விபரங்கள் திருமலை பிரசைகள் குழுவுக்கு பாதுகாப்பு வட்டாரங்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-எ-150)

## சிவப்பிரகாச வித்தியாலய விழா

பருத்தித்துறை, மார்ச் 10

பருத்தித்துறை தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலய 50 ஆவது ஆண்டு ஞாபகார்த்த நூலகத் திறப்பு விழாவும், பரிசளிப்பு விழாவும் வித்தியாலய அதிபர் திரு சி சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெற்றன.

நூலகத் திறப்பு விழாவில பிரதம விருந்தினராக நெல்லியடி கோட்டக் கல்வித் திணைக்களப் பொறுப்பதிகாரியும் பிரதம கல்வி அதிகாரியுமான திரு. வே. தங்கராசா கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். (இ-118)

## ஸ்கந்தவரோதய மாணவனுக்கு ஜனாதிபதிசின்னம்

மானிப்பாய், மார்ச் 10

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர் பத்குணராசா முருகானந்தன் (வயது 16) இந்த ஆண்டுக்கான சாரணத் தலைவருக்கான ஜனாதிபதி சின்னத்தை பெற்றுக் கொண்டார்.

கண்டி தர்மராஜா கல்லூரியில் பெப்ரவரியில் நடைபெற்ற சாரணர் ஜம்பூரி நிகழ்ச்சிகளின் போது சாரணர் தலைவர்களுக்கான ஜனாதிபதி சின்னம் வழங்கப்பட்டது. (இ-90)

# தமிழர் நலனில் அக்கறை கொண்டவர்கள் தீவிரவாதிகளுக்கு ஆயுதம் வழங்கக் கூடாது-லலித்

கொழும்பு, மார்ச் 10

தமிழரின் நலன்களில் அக்கறை கொண்ட எவரும் தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களோ, பணமோ வழங்கக் கூடாது.

தேசியப் பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத்முதலி முன்கண்டவாறு தெரிவித்தார்

சர்வதேச ரீதியில் இலங்கையின் நண்பர்கள், விரோதிகள், நடுநிலைமையாளர்கள் குறித்து அமைச்சர் லலித் அத்துலத்முதலி கருத்து வெளியிட்ட போதே, முன்கண்ட வேண்டுகோளை விடுத்தார்

தீவிரவாதிகளுக்கு இரகசியமாக சிலர் ஆயுதம் வழங்குகின்றனர்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் காணப்பட வேண்டும். எதற்கும் முதலில் தீவிரவாதிகள் ஆயுதப் போராட்டத்தை கைவிட வேண்டும்.

இப்படி அமைச்சர் அத்துலத்முதலி சொன்னார். (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"TOEFL"
வகுப்புகள்
By
S·B·IYAR
சனி / ஞாயிறு 1-30 — 3-30 p m
1. ஒலிப்பதிவு நாடாக்கள்
2. பயிற்சிப்புத்தகங்கள் உதவியுடன்
12, வைமன் வீதி,
நல்லூர்.



# உதயன்

10-03-1987 செவ்வாய்க்கிழமை



"TOEFL"
பரீட்சைக்குரிய பயிற்சிப் புத்தகங்கள்
1 SECTION -- III
Reading Comprehension
2. SECTION -- II
Structure and Written Expression
கிடைக்குமிடம்,
S. B IYAR
12, வைமன் வீதி,
நல்லூர்.


### ...ற்றும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டில் இருந்த தாய், தாப்பன், மகன் ஆகியோர் பலியாகியிருந்தது குறிப்பிடத்தக்கது

ஜும்மா மொஸ்க் லேனைச் சேர்ந்த மொகமட் சுல்தான் (23 வயது) என்பவரே நேற்று மரணம் அடைந்தவர் ஆவார். (இ-10)

### பாடசாலை:..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கால் அச்சுவேலிப்பகுதிகளில் ஹெலியில்இருந்து துப்பாக்கிப்பிரயோகம் ஷெல் தாக்குதல் என்பன மேற்கொள்ளப்பட்டதால் பாடசாலை மாணவர்கள் சிலர் காயமடைந்தது குறிப்பிடத்தக்கது. (இ-11)


## இடம் மாற்றம்

### அம்பிகாபதி பென்சி குட்ஸ்

எமது ஸ்தாபனத்தை பாதுகாப்பு கருதி கீழ் கண்ட விலாசத்திற்கு தற்காலிகமாக மாற்றி அமைத்துள்ளோம்,

அம்பிகாபதி பென்சி குட்ஸ்
159, கன்னாதிட்டி ரோட்,
பெருமாள் கோவில் (அருகாமை)
யாழ்ப்பாணம்.


### அமெரிக்கத் தயாரிப்பான

# 'கொப்ரு' ஹெலிகளை வாங்க அரசு முயற்சி

கன்பரா, மார்ச் 9

'கொப்ரு'ரக ஹெலிக்கொப்டர்களைப் பெற இலங்கை அரசு முயற்சி எடுத்து வருகிறது

'கொப்ரு' ஹெலிக்கொப்டர்கள் அமெரிக்காவினால் உற்பத்தி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

கெரில்லா யுத்தங்களில் 'கொப்ரு' ஹெலிக்கொப்டர்களைப் பாவிக்க முடியாது.

இதனால் இந்த ரக ஹெலிக்கொப்டர்களை இலங்கை அரசுக்கு வழங்குவதில் தயக்கம் காட்டப்படுகிறது.

கொப்ரு ஹெலிக்கொப்டர்கள் பாவிக்கப் பட்டால் உயிர்,பொருள் சேதங்கள் அதிக அளவில் இடம்பெறும் அபாயம் ஏற்படும் —

இப்படி அவுஸ்திரேலியா வானொலியில் ஆசிய தென்ஆசிய செய்தியாளர் தெரிவித்தார். (உ-எ)

### இந்தியா பாகிஸ்தான்

## 4 ஆவது டெஸ்ட்டும் வெற்றி தோல்வியின்றி முடிவு

அஹமதாபாத் மார்ச்10

இந்தியா-பாகிஸ்தான் அணிகளுக்கிடையேயான நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியும் நேற்று வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தது

ஓட்ட விவரம்:-

பாகிஸ்தான்: முதல் இன்னிங்ஸ் 395 ஓட்டங்கள் இரண்டாவது இன்னிங்ஸ் 2 விக்கெட் இழப்புக்கு 135 ஓட்டங்கள்.

இந்தியா: முதல் இன்னிங்ஸ் 323 ஓட்டங்கள்.

சென்னை, கல்கத்தா, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களில் நடந்த முதல் மூன்று டெஸ்ட்களும் வெற்றி தோல்வி இன்றி முடிவடைந்தன என்பது தெரிந்ததே.

ஐந்தாவது டெஸ்ட் பெங்களூரில் நடைபெறும் (உ-எ)

## முல்லைத்தீவு மீனவ அகதிகளுக்கு வலைகள்

### 'போரட்'ஸ்தாபனம் உதவி

முள்ளியவளை,மார்ச் 10

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மீனவ அகதிகளுக்கு நோர்வே ஸ்தாபனமான 'போரட்' ஸ்தாபனம் 500 மீன்பிடி வலைகளை நன்கொடையாக வழங்கியுள்ளது

நோர்வே ஸ்தாபனப் பிரதிநிதிகள் அண்மையில் முல்லைத்தீவு அகதிகள் புனர்வாழ்வு ... அதிகாரியான முல்லைத்தீவு அரச அதிபர் திரு தே. பொன்னம்பலத்திடம் இவ்வலைகளை ஒப்படைத்தனர்.

இவ்வலைகள் அளம்பில், செம்மலை, கொக்குத்தொடுவாய், கொக்கிளாய், தென்னமரவாடி ஆகிய இடங்களைச் சேர்ந்த மீனவ அகதிகளுக்கு வழங்கப்படும்.

இந்த அகதிகளுக்கு அரசாங்கம் வழங்கி வந்த நிவாரண உதவிகள் நிறுத்தப்பட்டு விட்டன. (இ-எ-93)

### அன்றீஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வித்தனர் என்றும் அறிய வந்தது

பிற்பகல் 4 மணியின் பின்னர் ஷெல்லடி ஹெலித்தாக்குதல் என்பன சற்றுக் குறைந்தன.

கடந்த இரண்டு நாட்களாக நாவற்குழி இராணுவ முகாமிற்குத் தண்ணீர் விநியோகம் நடக்கவில்லை என்றும் அறியப்படுகிறது.

சிப்பாய்களின் ஷெல் தாக்குதல்களினால் நாவற்குழிப் பகுதியில் பலவீடுகள் சேதமடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (அ-10)

### இந்தியா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைந்துள்ளன.

இரவு பகலாக குடாநாட்டில் இராணுவ முகாம்களில் இருந்து மோட்டார் ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டுக் கொண்டே இருக்கின்றன குடிமக்கள் வாழும் பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்து பலத்த சேதம் ஏற்படுத்துகின்றன இதனால் பெண்களும் குழந்தைகளும் அலறியடித்துக் கொண்டு வீடுகளை விட்டு ஓடவேண்டி உள்ளனர்.

இப்படிக் கைவிடப்பட்ட வீடுகளை படையினர் குண்டு வைத்துத் தகர்க்கின்றனர்

இவ்வாறு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பகுதிகளில் வாழ்பவர்களை காரணம் இன்றிக் கைது செய்கின்றனர் குடிமக்களை வெட்டுவதும் சுடுவதும் இடம் பெறுகின்றன பெண்கள் மானபங்கப்படுத்தப்படுகின்றனர்.

உண்மை நிலைமை இந்தியாவுக்கு எடுத்துச் சொல்லுகின்றேன். காலம் தாழ்த்தாது தலையிட்டு எம்மைக் காப்பாற்றுங்கள்

இந்தியாவைவிட்டால் இலங்கைத் தமிழருக்கு வேறு எவரும் துணை இல்லை இலங்கைத் தமிழினத்தைக் காப்பாற்றிய பெரும் நாடு இந்தியா என்று சரித்திரத்தில் எழுதப்படவேண்டும்

இப்படி ... பிரசுரிக்கப்பட்டுள்ளது ... யுள்ளது. (உ-எ)

### கைலாசபதி அரங்கில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,மார்ச் 10

'இன்றைய காலகட்டத்தில் தமிழ்ப் பெண்களின் நிலை' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நாளை புதன்கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறும்

யாழ் பல்கலைக்கழக புவியியல் கழகம் இந்த நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளது

கழகத் தலைவர் திரு க. தர்மலிங்கம் தலைமை வகிப்பார்

புவியியற்துறை விரிவுரையாளர் திரு கார்த்திகேசு நடேசபாலன் 'சமூக நோக்கில் பெண்கள்' என்ற தலைப்பிலும், தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி சித்திரலேகா மௌனகுரு 'சமூகமும் பெண்களும்' என்ற தலைப்பிலும், சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கம் 'சட்ட நோக்கில் பெண்கள்' என்ற தலைப்பிலும் உரை நிகழ்த்துவர். (இ-எ)

### பரிசுகளைப் பெற்றுக்கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 10

தமிழீழ விடுதலைப் புலிகளினால் குலுக்கப்பட்ட சுவீப் டிக்கெட்டில் பரிசு பெற்ற அதிஷ்டசாலிகள் தமது பரிசுகளை நாளை (புதன்கிழமை)க்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் கோரிக்கை விடுத்திருக்கின்றனர்.

யாழ் ஸ்ரான்லி வீதியில் உள்ள சுவீப் டிக்கெட் விற்பனவு மத்திய நிலையத்தில் இந்தப் பரிசுகளைப் பெற்றுக்கொள்ளலாம் (உ)

### நிச்சயிக்க,..

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

முடியாது என்று அறிவிக்கவில்லை.

கல்வித் திணைக்களமும் எந்த ஒரு பாடசாலையையும் மூடவும் அனுமதிக்கவில்லை

ஆசிரியர்கள் தமது பணியைத் தொடர்ந்து செய்வார்கள் - இவ்வாறு பணிப்பாளர் தெரிவித்தார். (இ-5)

## இரவில் மின்வெட்டு: அச்சுவேலி இருளில்

யாழ்ப்பாணம் மார்ச் 10

கடந்த இரு வாரங்களாக அச்சுவேலிப் பகுதி இருளில் மூழ்கியுள்ளது கடந்த மூன்று தினங்களாக அச்சுவேலிப் பகுதியில் பகலில் மட்டுமே மின்சார விநியோகம் நடைபெறுகின்றது

இரவில் மின் விநியோகம் தடை செய்யப்பட்டுள்ளது.

இரவில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதே இதற்குக் காரணம்.

அச்சுவேலிப் பகுதிக்கான மின்சார விநியோகத்தை மேற்கொள்ளும் மின்மாற்றி மின்பளு காரணமாக வெடித்துச் சிதறுமென இருக்கவே இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட பகல்நேர மின் விநியோகம் மேற்கொள்ளப்படுகிறது

சட்டவிரோத மின்பாவனை நிறுத்தப்படும் வரை இரவு மின்சார வெட்டு தொடர்ந்து இருக்கும் என தெரிய வருகின்றது

இதனால் அப்பகுதி பொதுமக்கள் பெருமளவு அதிருப்தியும், இலேசமும் அடைந்துள்ளனர் (இ-11)

### மக்கள் வங்கி..:

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத் தலைமையலுவலகம் நகைகள் மீளளிப்பு சம்பந்தமான அலுவல்களைக் கவனிக்க விசேடமாக அனுப்பிவைத்துள்ளது.

நகைகளை திருப்பிக் கொடுக்கும் திகதிகளையும் அதற்கான இடத்தையும் மக்கள் வங்கி நிர்வாகம் அறிவிக்கும் ஆகவே வாடிக்கையாளர் குறிப்பிடும் தினத்தில் குறிப்பிடும் இடத்திற்குச் சென்று நகைகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம்.

—இப்படி அறிக்கை விடப்பட்டுள்ளது. (உ-எ)

### வீடு சேதம்

வல்வெட்டித்துறை, மார்ச் 10

பருத்தித்துறை இராணுவ முகாமில் நேற்று காலை நடத்தப்பட்ட ஷெல்தாக்குதலில் இன்பருட்டியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சிவசாமியின் வீடு சேதமடைந்தது. இன்பருட்டிக் கிழக்கு எல்லையில் இந்த வீடு உள்ளது.

ஷெல், வீட்டின் மீது விழுந்து வெடித்தது வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலைத் தொடர்ந்தே. இராணுவ முகாமில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல் நிறுத்தப்பட்டது (இ-எ-160)


## மிகப் பிரபல்யமான கிரிக்கெட் வீரர் தெரிவு -1987

இரண்டாவது வார இறுதியில் வாக்களிப்பு முடிவுகள்
(350 வாக்குகளுக்கு மேல் பெற்றவர்கள்)

| | பெயர் | | பெற்ற வாக்குகள் |
|---|---|---|---|
| 1 | பொ. பிரபானந்தன், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | ... | 2,391 |
| 2. | ஆர் வாகீசன், (சென். ஜோன்ஸ் கல்லூரி) | ... | 1 305 |
| 3 | க டெரிமான், (யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) | ... | 1,146 |
| 4 | பி புவனேந்திரகுமார், (மானிப்பாய் இந்துக் கல்லூரி) | ... | 1008 |
| 5 | கே எஸ் ரவிக்குமார், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி). | ... | 750 |
| 6 | ஆர் பி செளந்தரநாதசம், (சென் பற்றிக்ஸ் கல்லூரி) | ... | 552 |
| 7. | எஸ் கோகுலன், (கொக்குவில் இந்துக் கல்லூரி) | ... | 510 |
| 8, | என். நித்தியரஞ்சன், (யாழ்ப்பாணக் கல்லூரி) | ... | 435 |
| 9. | கே. பிரேம்நாத், (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி) | ... | 399 |
| 10 | றிச்சாட் மோகனதாஸ், (சென். பற்றிக்ஸ் கல்லூரி) | ... | 393 |
| 11. | என் கிருபானந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) | ... | 384 |
| 12. | எஸ், நேசகுமார், (சென் ஜோன்ஸ் கல்லூரி) | ... | 363 |

★ இவ்வார இறுதியில் முன்னணியில் திகழும் வீரருக்கு வாக்களித்து ரூபா 50/-ஐ பரிசாகப் பெறும் அதிஷ்டசாலிகள்

1. திரு பி. இராகுலன், 18/1, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
2. திரு எம். ஆனந்தலிங்கம், 235, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

★ இவ்வார வாக்களிப்பில் பங்கு பற்றி ஒரு மாதத்துக்கு உதயன் சஞ்சீவி பத்திரிகைகளை இலவசமாக வாங்குவதற்கான பற்றுச் சீட்டைப் பெறும் இரு அதிஷ்டசாலிகள்:-

1. செல்வன் தி மணிவண்ணன், எட்டாம் வகுப்பு 'F' பிரிவு, யாழ் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
2. திரு. பா. சேரன், 48, புங்கங்குளட் வீதி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

(பரிசுகள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்)

— கிரிக்கெட் போட்டிக் குழு

வடக்கின் மிகப் பிரபல்யமான
பாடசாலை கிரிக்கெட் வீரர் தெரிவு 1987



உதயன் நிறுவனத்தின் ஆதரவோடு
யாழ் ஜொ லிஸ்ராஸ் ஸினியன்ஸ்
விளையாட்டுக் கழகங்கள் இணைந்து நடத்தும்
மிகப் பிரபல்யமான
கிரிக்கெட் வீரரை வாசகர்கள்
தெரிவு செய்யும் போட்டி
வீரரின் பெயர் ..........
கல்லூரி ..........
வாக்காளர் பெயர் ______
விலாசம் ______
ஒப்பம் ______



நீத்தார் பட்டியல்

## திரு. பி. சிவகுரு

திரு பி. சிவகுரு அவர்கள், இளைப்பாறிய தலைமை ஆசிரியர் திங்கள் 9-3-87ல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தேவாலய வீதி,
சங்கானை



## 41ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 29-9-1965

உதிர்வு: 29-1 1987

மாணிக்கம் - குணசிங்கம் (பவுன்)


தாய் நாட்டைக் காத்து எங்கள் தாயகத்தை மீட்கச் சென்ற எங்கள் இனியவனே! எங்கள் இளையவனே! நீ எங்களை விட்டு எங்கே சென்றாயோ. இறைவனடி அடைந்தும் உங்கள் குணம் எங்கள் மனதில் என்றும் நிலைத்துநிற்க ஆண்டவனைப் பிரார்த்திக்கிறோம்.

நாவலடி, உடுப்பிட்டி.

-நா. மாணிக்கம் குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி



### செல்வன் ஐயாத்துரை ஜெயம்

அன்னையின் மடியில் 25.7.62
அசுரரின் அழிப்பு 7.3 87

திடீரென மறைந்த எமது ஸ்தாபன ஊழியர் செல்வன் ஐயாத்துரை ஜெயம் அவர்கட்கு எமது இதய கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

உரிமையாளர், ஊழியர்கள்
யூனிவேர்சல் ரெலக்ஸ்
யாழ்ப்பாணம்.

10 03-87



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 10-03-1987 தொலைபேசி இல. 24805 22076

Printed and Published by Uthayan Publications (Private) Ltd., 15, Second Lane, PowerHouse Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office, Under Number QJ / 94 /N /87. Telephone, 24805, 22076



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org